**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.25.07.2025**

**O.S. No.362/2015**

**பி.வா.சா.2 – ரத்தினம்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வது வகுப்பு. எந்த வருடம் 10 ம் வகுப்பு படித்தேன் என்றால் 2010 ல் படித்து முடித்துவிட்டேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். இந்த வழக்கில் 1 வது வாதி வேதநாயகம் எனது தகப்பனார் என்றால் சரிதான். 1 வது வாதி வேதநாயகம் ஓய்வு பெற்ற ஓவிய ஆசிரியர் என்றால் சரிதான். 2 வது வாதி மரியபாக்கியம், 1 வது பிரதிவாதி பார்வதி ஆகியோர் 1 வது வாதி வேதநாயகத்தின் மனைவிகள் என்றால் சரிதான் மேற்படி இருவரும் உடன்பிறந்த சகோதரிகள். 2 வது வாதி மரியபாக்கியம், 1 வது பிரதிவாதி பார்வதி ஆகியோரின் தாயார் பெயர் செல்வம் என்றால் சரிதான். எனது தாயார் வழி பாட்டி செல்வமும், என் அப்பா 1 வது வாதியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் அப்பாவின் தாயார் பெயர் மகமாயி தந்தை பெயர் கல்யாணி என்றால் சரிதான். மகமாயியின் அப்பா பெயர் சோ.குருந்தன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் மேற்படி சோ.குருந்தனுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல என் அப்பா 1 வது வாதி சுயமாக கிரையம் பெற்ற சொத்துக்கள். 1 வது தபசில் சொத்து என் தந்தையால் வெங்கடாசல அய்யர் என்பவரிடமிருந்து வா.சா.ஆ.1 மூலமாக கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதே தேதியில் என் தாயார் பெயருக்கும் வா.சா.ஆ.2 ன் படி சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி வாங்கப்பட்ட சொத்து வா.சா.ஆ.1ன் படி என் தந்தை கிரையம் பெற்ற சொத்துக்கு மேற்கில் உள்ளது என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து என் பாட்டியான செல்வத்துக்கு பாத்தியப்பட்டு, அவரிடமிருந்து எனது தாயாருக்கும் எனது பெரியம்மாவுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

எனது தாயார் மற்றும் பெரியம்மா பெயரில் 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து பட்டா.158 உள்ளது என்றால் சரிதான். நான் எனது எதிர்வழக்குரையில் காண்பித்துள்ள 2 வது தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 91/2, 91/1C. மேற்படி சர்வே எண். 91/2, 91/1C இந்த வழக்குப் பிராதில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 91/2, 91/1C சொத்தைப் பொறுத்து நான் எந்தப் பரிகாரமும் எனது எதிர்வழக்குரையில் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் என் தாயார் சாட்சியம் அளித்த விவரங்கள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். சர்வே எண். 91/2, 91/1C சொத்தை என் தாயார் மற்றும் சகோதரரான ரவி கல்யாணசுந்தரத்திற்கு பி. வா.சா.ஆ.3 மூலமாக எழுதிக்கொடுத்தார் என்றால்சரிதான். வழக்கு சொத்துக்களுக்கு யார் யார் பெயரில் பத்திரம் உள்ளதோ அவர்கள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் வழக்குத் தாக்கல் செய்தபிறகு, வழக்குச் சொத்துக்களை எனது பெயருக்கு என் தாயார் வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யக்கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் பத்திரம் எழுதிக் கொடுக்கும்போது என் அப்பா உடன்இருந்தார் அவர் சம்மதத்தில் தான் பத்திரம் எழுதப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 1 வது வாதி உடன் இருந்தார் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகளிடம் எந்த ஆவணங்களையும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். 2015 வரை எங்கள் குடும்பத்தில் நல்ல இணக்கமாகத்தான் இருந்தோம் அதன் பிறகு தான் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். நானும் என் தாயாரும் சேர்ந்து மோசடியாக மேற்படி வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தியதால் தான் பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல. 1 வது தபசில் சொத்தைப் பொறுத்து என் தாயார் பார்வதிக்கு உரிமை கிடையாது அதனால் வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2வது தபசில் சொத்தைப் பொறுத்து 2வது வாதிக்கு பாதி உரிமை இருப்பதால் அதனை முழுமையாக எழுதிக் கொடுக்க என் தாயார் பார்வதிக்கு உரிமை கிடையாது அதனால் வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கோரிய விளம்புகை, பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதிகளோ, ரவிகல்யாணமோ என் தாயாரிடம் மோசடியாக எந்த ஆவணங்களும் எழுதி வாங்கவில்லை அதனால் நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் வாதிகளோ, ரவிகல்யாணமோ என் தாயாரிடம் மோசடியாக ஆவணங்களை என் தாயாரிடம் எழுதி வாங்கினார்கள் எந்தப் புகாரும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் உண்மையில் பரிவர்த்தனை ஆவணம் என்று சொல்லி தான செட்டில்மெண்ட் எழுதி வாங்கியிருந்தால், காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சொல்லியது போல எந்த சம்பவங்களும் நடக்காததால், நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.07.25 16:18:35 +0530